உ

சிவமயம்



சோதிராஜா குகானந்தி தம்பதிகளின்

செல்வப் புதல்வி

## செல்வி திவ்வியம்பிகா

அவர்களின்

# நினைவு மடல்

06-01-2003

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

பதினான்காம்
அகவையிலே
பாழும் நோய்கண்டு
அம்பிகையாள்
திவ்விய தரிசனம்
காணவேண்டி
ஓவியமாகிவிட்ட
எமதன்புக்
குலக்கொழுந்தின்
பிஞ்சுக்கழல்களுக்கு
இம்மலர்
சமர்ப்பணம்

- குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# செல்வி திவ்வியம்பிகா சோதிராஜா

(வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மாணவி) கொழும்பு

| உதயம் | அஸ்தமனம் |
| --- | --- |
| 12–09–1988 | 07–12–2002 |

## திதி வெண்பா

ஆண்டு சித்திரபானு கார்த்திகை மதி இருபத்தொன்று
பூண்ட சதுர்த்தித்திதி பிற்பகலில்
நீண்ட புகழ் செல்வி திவ்வியம்பிகா
வேண்டி அடைந்தாள் இறைவன் தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினை வேரறுக்க வல்லான்
வினாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாயகனாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறைசிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயத்
தொண்டனே விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடம்ஆகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் யுன்றன்
றிருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞான மொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடி யார்கள் வினை தீர்க்குமகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிறப்புக்கோர் திவ்வியம்பிகா

ஆழிசூழ் இலங்கா தேவியின் சிகரம் போல் மிளிரும் யாழ்ப்பாணம் என்னும் மாண்புறு தொகுதியில் சிவன் பண்ணை வீதி வண்ணார்பண்ணை என்னும் பகுதியில் வாழ்வாங்கு வாழ்ந்த திரு.சோதிராசா, திருமதி குகானந்தி சோதிராசா தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாக 12-09-1988ம் ஆண்டு பிறந்தவரே அமரர் செல்வி திவ்வியம்பிகா ஆவார்.

இவரது தந்தையார் தொல்புரத்தில் சீரும் சிறப்புடனும் வாழ்ந்த பெரியார் ரிச்சேட் செல்லையா இராசக்கோன் திருமதி. நாகம்மா இராசக்கோன் சைவப் பண்புமிகு தம்பதிகளின் சற்புத்திரன் சோதிராசா என்பவரே ஆகும்.

உடுவிலில் புகழுடன் வாழ்ந்த கார்த்திகேசு முதன்மை ஆசான் திருமதி இராசம்மா ஆசிரியை அவர்களது நான்காவது புத்திரன் அரிநேசகுகனினதும் வண்ணார் பண்ணையில் வாழ்ந்த பிரபல நகைக்கடை உரிமையாளர் பொன்னம்பலம் அவர்களின் அன்புமகள் காந்திமதி தம்பதிகளின் பாசமகள் குகானந்தி என்பவரே இவரது தாயாகும்.

இவர் தனது மூத்த சகோதரன் நிர்மலமுரளி சகோதரி சண்முகப்பிரியா, தம்பி இன்பகுமரன் ஆகியோருடன் பாசத்துடனும் நேசத்துடனும் அன்புடன் வாழ்ந்து வந்தார்.

திறமை மிக்க மாணவியாகிய இவர் ஆரம்பக்கல்வியை யா / புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையிலும், கொ/ புல்மென்டன் தமிழ் மகாவித்தியாலயத்திலும் கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்பு ஒன்பதாம் தரம் வரை கொ/ சைவமங்கையர் கழகம் வெள்ளவத்தையில் கற்று சகலரதும் பாராட்டுக்களைப் பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பணிவான இயல்பும் அமைதியான சுபாவமும், ஆழ்ந்த அகன்ற கூர்மையான அறிவும் யாவரையும் கவர்ந்தது. ஏனைய மெய்வல்லுனர் போட்டி பாடசாலை மொழித்திறன், கலைப்போட்டிகளில் மனவிருப்பத்துடன் இயல்பாகவே பங்குபற்றி பல பரிசில்கள் பெற்று புகழ் பூத்த மாணவியாக விளங்கினார்.

கொழும்பு மாநகரில் இவர் வாழ்ந்த போது கொடிய நோய் இவரை வாட்டியது. பெற்றோர் துடித்தனர், சகோதரர் கலங்கினர், உற்றோர் வாடினர். பிறந்த மண்ணையும் உறவினர்களையும் காண வேண்டும் என்ற அவாவுடன் யாழ்ப்பாணம் வந்தார்.

"சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும்
சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்"

நேற்றிருந்தார் இன்றில்லை. நிலையில்லாதது இவ்வுலகு என்ற உண்மையை உணர்த்தும் வகையில் காலைக் கதிரவன் இடையில் மறைந்தது போல் திவ்வியா 07-12-2002 சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்தார்.

அடுத்தநாள் இலக்கம் 207 சிவன் பண்ணை வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவரது வீட்டில் உற்றார், உறவினர், நண்பர்கள், பெற்றோர், சகோதரர்கள் யாவரும் கண்ணீர் சொரிந்து கதறி அழ 12 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் வில்லூண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் சென்று தகனக் கிரியை நடைபெற்றது.

மறைந்த திவ்வியம்பிகா இறைவனின் திருவடி அடைந்து வாழ வாழ வாழ என்று பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நினைவாஞ்சலி

வஞ்சமே இல்லாத வாரிசாக
வாடுபவர்க்கு உதவிடும் திவ்வியா
பிஞ்சு மனத்தாள் உன்மறைவு
பேருலகில் கவலையைத் தந்ததம்மா

என்ன பிழை நாம் செய்தோம்?
எம்மை விட்டு ஏன் பிரிந்தாய்?
கொள்ளை கொலை நிறைந்த
கொடிய உலகை வெறுத்தாயோ?

இரட்டை வேடம் போடும்
இன்றைய சமுதாயத்திற்கு
உனது சேவை தேவையில்லை
என்று நினைத்துச் சென்றாயோ?

கலைகள் பல பயின்றாய்
கல்வியில் சிறந்து நின்றாய்
ஆசைத் தாத்தா என்று என்னை அன்புடன்
அழைக்க யார் உளர் இனி?

உடுவில்
சுன்னாகம்

சமூகஜோதி
**கா. கணேசதாசன்** (J.P)
ஓய்வுபெற்ற அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிது கொடிது மரணம் கொடிது
# இளமையில் மரணம் மிகவும் கொடிது
# அதனிலும் கொடிது எங்கள்
# திவ்விய அம்பிகாவின் மரணம்

1. அன்பின் சொரூபமாய் அறிவுப் பெட்டகமாய்
கள்ளமில்லா சிரிப்புமாய் கனக்குதம்மா எம்மிதயம்
தாங்கவில்லை எம் கண்கள் கனநாளாய்த் தூங்கவில்லை
தங்கத் தேரெல்லோ தடம் புரண்டு போச்சுதல்லோ

2. விதியென்பர் காலனவன் சதியென்பார் - நாம்
கதியற்றுக் கலங்குவதை கண்திறந்து பாராயோ
உன்னைப் பெற்றவர் கண்ணீரில் ஓடம் செலுத்தி வந்தோம்
எழுந்து வா அம்மா நாம் துடுப்பிழந்து தவிக்கின்றோம்.

3. உம் கணீரென்ற குரலினில் “சித்தி” என்ற சொல்
எங்கம்மா போச்சு இன்று
தேடுகின்றேன் தேடுகின்றேன் கண்ணீரால் தேடுகின்றேன்
நம்ப முடியவில்லை என்னால் நம்பமுடியவில்லை
தேவலோகம் செல்ல ஏன் இந்த வேகம் என் அம்பிகையே

4. உமது பூத உடல் தான் செந்தணலில் - ஆனால் உமது
புகழ் உடலோ இப் பூவுலகில் என்பதில் ஐயமில்லை
- எம் அன்புருவே
உமது புனித ஆத்மா என்றும் சிவன் கழலில்
இரண்டறக் கலந்திருக்கும் என்பதூம் திண்ணம்

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்தித்து நிற்கும்
**திரு.திருமதி ஜெகநாதன்**
(சித்தி குடும்பத்தினர் சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

இராசக்கோன் + நாகம்மா

அரிநேசகுகன் + காந்திமதி

இராஜேஸ்வரி அம்மா + கந்தசாமி

குணராசா + ஜயசோதி

சோதிராசா — குகானந்தி

யதுகுலராணி + கைலாயபிள்ளை

ட ..ணியராசா + சிவசக்தி

சற்குணராணி + செல்வரத்தினம்

கிருபாராணி + நாகராசா

மக..லட்சுமி + ரவிச்சந்திரன்

குகானந்தன் + கிருபாம்பிகை

தயானந்தி + ஜெகநாதன்

நிர்மலமுரளி

சண்முகப்பிரியா

திவ்வியம்பிகா

இன்பகுமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா உபதேசம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடைதாகியது.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாரம்சமும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்ப ஒளி விளக்காய் ஒளி வீசி 07-12-2002ல் அணைந்து சிவபதமடைந்த எங்கள் **செல்வி திவ்வியம்பிகாவின்** மரணச் செய்தி கேட்டு ஓடி வந்து உதவிகளைச் செய்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தந்தி தொலைபேசி, தபால் மூலமாக அஞ்சலியைத் தெரிவித்தவர்களுக்கும் இன்றுவரை எமக்கு வேண்டி உதவிகளைச் செய்தோருக்கும் இம்மலர் வெளியிட உதவிய அனுதாபிகளுக்கும், இன்றைய வீட்டுக் கிருத்தியங்களில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

207, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

சரவணா அச்சகம் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org